# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com

குரல் - 42 | 30.04.2023 (ஞாயிற்றுக்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 5 | ஊக்குவிப்பு : ரூ.30.00



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



## யாழில் சொந்தமாக காணி வாங்கிய பிக்கு காணிக்குள் விகாரை அமைப்பதற்கு விண்ணப்பம்!



பக்கம் 5

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் தனியார் காணி ஒன்றினை கொள்வனவு செய்துள்ள பௌத்த பிக்கு ஒருவர், அக்காணியினுள் விகாரை ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சிறுபான்மையினர் மீதான அரசின் அடக்குமுறைகளை ஐ.நா தடுக்க வேண்டும்: எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை



பக்கம் 5

வடக்கு - கிழக்கில் மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளர்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் எட்வேர்ட் ரீஸ், ஐக்கிய நாடுகள்

# பறிபோகும் தமிழர் தாயக நிலங்கள்

## திட்டமிட்ட சிங்களமயமாக்கல்களுக்கு ஒரு தேசமாக எதிர்ப்பு..!

திட்டமிட்ட சிங்கள மயமாக்கல்களுக்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள்பறிபோய்க்கொண்டே இருக்கும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மக்களின் கோரிக்கைக்கு இணங்க தையிட்டியில் சட்டவிரோதமாக தனியார் காணியில் அமைக்கப்பட்ட விகாரையினை பார்வையிட்டு களநிலவரங்களை ஆராய்ந்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


இந்த விகாரை அமைக்கப்பட்ட இடம் தனியாருக்கு சொந்தமானது. சட்டவிரோதமான இந்த கட்டட வேலைகள் இரண்டு வருடத்திற்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட பொழுதே மாவட்ட அபிவிருத்தி சபை கூட்டங்களிலும் பிரதேச அபிவிருத்தி சபைக்கூட்டங்களிலும் இந்த சட்டவிரோத செயற்பாடுகளை வெளிப்படுத்தி இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என கோரியிருந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக இன்னுமொரு விசேட கூட்டம் கூடப்படும் என வாக்குறுதி அளித்திருந்தும் எந்தவிதமான கூட்டங்களோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இன்று இந்த விகாரை இராணுவத்தினரின் முழுப்பங்களிப்போடு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

தையிட்டியில் மட்டுமல்ல இன்று தமிழர்தாயக



பக்கம் 5

## விடுதலைப் புலிகளின் தலைவர் எனது அண்ணன்! சிங்களப் பெண்மணி



பக்கம் 5

“நான் விடுதலைப் புலிகளின் தலைவரின் தங்கை” என யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிங்கள பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், “விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகவும் நல்லவர். காரணம் ஒரு தவறு நடந்தால், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார். உதாரணமாக, வித்தியாவின் படுகொலை விவகாரத்தில் இன்னமும் வழக்கு

## கூச்சலிடுவதால் கோட்டை கதவுகள் திறக்காது : அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



உழைக்கும் மக்களின் வாழ்வில் நிரந்தர விடியல் பிறக்கவும், சகல இன மத சமூக மக்களும் சமவுரிமை பெற்ற நிமிர்காலம் நிலைக்கவும் தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில்

பக்கம் 5

## தமிழின விடுதலையே தொழிலாளர்களுக்கான விடுதலை-சபா.குகதாஸ்...!



பக்கம் 5

மே ஒன்று உலக தொழிலாளர் தினம். எமது தமிழர் தாயகத்தில் உள்ள ஒட்டுமொத்த தொழிலாளர்களும் தங்களது உரிமைகளை இழந்து ஒடுக்கப்படுகின்ற சமூகமாக தொடர்ந்து தங்கள் வாழ்வில் போராடி வருகின்றனர் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்துள்ளார்.

## தமிழ், முஸ்லிம் எம்.பிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இனவெறி சட்டமே

## மலையக மக்களின் துயரத்துக்கு காரணம்: என்.சிறிகாந்தா



பக்கம் 5

கால் நூற்றாண்டு கால யுத்தத்தினால் பேரழிவைச் சந்தித்த வடகிழக்கு மாநிலத்தின் தமிழ் பேசும் விவசாயிகள் மற்றும் கடற் தொழிலாளர்களும் இந்த மே தினத்தில் நல்லதோர் எதிர்காலம் பற்றிய கனவுகளை தாங்கிய வண்ணம் வாழ்க்கைப் போராட்டத்தில் துணிந்து நிற்கின்றனர் என தெரிவித்துள்ளார் தமிழ் தேசிய கட்சியின் தலைவர் என்.சிறிகாந்தா.

உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் இதனை தெரிவித்துள்ளார். அந்த செய்தியில் உலக தொழிலாளர்களின் எழுச்சி நாளான மே தினத்தில் இலங்கைத் தமிழ் இனத்தின் தொழிலாளர் வர்க்கமும் இணைந்து நிற்பது இயற்கையானது.

இலங்கைத்தீவில் மிக இறுக்கமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆட்சிக் கட்டமைப்பு என்பது தமது உடல் உழைப்பை மட்டுமே நம்பி வாழும் தொழிலாளர்களின்

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

## உயர்தர விடைத்தாள் திருத்தும் பிரச்சினைக்கு தீர்வு என்ன

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணி தொடர்பான வேலை நிறுத்தம் நிறைவு செய்யப்படுமா? இல்லையா என்பது ஒரு கேள்விக்குறியே. கடந்த வாரம் வேலை நிறுத்தம் முடிவடையவிருந்த போதிலும் விடைத்தாள் மதிப்பீடு அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளதாகவும், மதிப்பீட்டில் பங்குபற்றாதவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பணிப்புறக்கணிப்பை தொடர தீர்மானிக்கப்பட்டது. இந்த இழுபறியால் இரு தரப்பிலும் உயர்தரம் எழுதிய பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மதிப்பீட்டு பணி நடவடிக்கை தாமதமடைவதன் காரணமாக நடைபெற உள்ள மற்ற பரீட்சைகள் எழுதும் பிள்ளைகளை பாதிக்க வாய்ப்புள்ளது. புதிய வரி விதிப்பு காரணமாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டாத பின்னணியில். பல்கலைக்கழகத்தில் வேலைநிறுத்தப் போராட்டம் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்தும் அரசாங்கம் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கான வேலை நிறுத்தம் இழுத்தடிக்கப்பட்டதால், அதற்கு அரசு எதிர்வினையாற்றியது. ஆனால் என்ன நடந்தது என்றால் பிரச்சனை மேலும் சிக்கலாகியது.

பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் ஆட்சியாளர்கள் எப்போதும் முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார்கள். ஆனால் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கல்வியில் அதிகப் பொறுப்பைக் கொண்டிருக்க வேண்டும். எனவே, இந்த விடைத்தாள்களின் மதிப்பீட்டுப் பணி புறக்கணிப்பு தொடராமல் தடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கையில் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் தொழில் வல்லுனர்களுக்கும் சில அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளதாலும், அதிக வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை காரணமாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் தலைமையிலான மக்கள் குறிப்பாக பல்கலைக்கழக ஆசிரியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக்கு இணக்க அணுகுமுறையைக் காட்டினர். ஆனால், உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியைத் தொடர்ந்து புறக்கணிப்பதாக மக்கள் மத்தியில் ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. விடைத்தாள்களை சரிபார்ப்பதற்காக வழங்கப்படும் தொகையை அதிகரித்துள்ள பின்னணியில் வேலை நிறுத்தத்தை தொடர்வது நியாயமற்றது என தெரிவிக்கப்படுகின்றது. விடைத்தாள்களை திருத்தும் போது பெறப்படும் பணத்தைக் கருத்தில் கொள்ளாமல், தரம் மற்றும் நம்பகத்தன்மையை பேண வேண்டியதன் அவசியத்தை கருத்திற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

# சிவாஜிலிங்கம் தொடர்பான காணொளி பொய்யானது!

## திரைமறைவில் புலனாய்வாளர்கள்..! வெளியான தகவல்



இலங்கையிலுள்ள அரச புலனாய்வாளர்களினால் சிவாஜிலிங்கம் தொடர்பான தவறான காணொளி ஒன்று நன்கு திட்டமிடப்பட்டு பரப்பபட்டு வருவதாக அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்துள்ளார்.

இன்று யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அந்த ஒளிப்பதிவு திருபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து போராட்டங்கிலும் முன்நின்று செயற்படுகின்ற துணிந்து செயற்படுகின்ற சிவாஜிலிங்கத்தை அடக்கி ஒருக்குவதற்காகவே அரச புலனாய்வாளர்களினால் இவ்வாறான செய்திகள் திட்டமிட்டு பரப்படுவதாக மு.தம்பிராசா குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே இந்த திட்டமிட்ட செயலுக்கு அனைத்து அரசியல்வாதிகளும் குரல் கொடுக்க வேண்டும் என்றும் மு.தம்பிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# வங்குரோத்து நிலையிலிருந்து மீளவேண்டுமா

## புலம்பெயர் தமிழர்கள் ரணிலுக்கு வைத்துள்ள நிபந்தனை...!



வங்ரோத்து அடைந்துள்ள இலங்கை மீண்டு எழ வேண்டும் எனில் புலம்பெயர் தமிழர்களின் உதவி அவசியமாகியுள்ள நிலையில் தமிழ் மக்களின் ஆதரவினை பெறவேண்டுமெனில் அரசாங்கம் உடனடியாக சைவ ஆலயங்களை அழித்து பௌத்த ஆலயங்கள் அமைக்கும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விவேகானந்தபுரம் பகுதியில் பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கும் வகையிலான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் மாறிமாறி இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்களினால் பல வழிகளில் அடிமைகளாக்கப்பட்டிருந்தார்கள்.

கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களுடைய மாகாணமாகயிருந்ததை இன்று பேரினவாதிகள் குடியேற்றங்கள் மூலமாகவும் பௌத்த மயமாக்கல் மூலமாகவும் கிழக்கு மாகாணத்தை சிங்கள பௌத்த மயமாக்கிவருகின்றனர், மாற்றமுறப்படுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில் தொல்பொருள் திணைக்களம் ஊடாக கிழக்கு மாகாணத்திற்கான தனித்துவமான தொல்பொருள் செயலணியை உருவாக்கியிருந்தார்கள்.

11பேர் கொண்ட அந்த குழுவில் பௌத்த மதகுருமார்களும், ஓய்வுபெற்ற பாதுகாப்பு தரப்பினை சேர்ந்தவர்களும் உள்ளடக்கப்பட்டு தொல்பொருள் என்ற ரீதியில் பல இடங்கள் கபளீகரம் செய்யப்பட்டன.

இதுபோன்று பல இடங்களில் தொல்பொருள் என்ற பெயரில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. வட மாகாணத்தில் வெடுக்குநாறி மலை, குருந்தூர்மலை போன்ற இடங்களில் பௌத்தத்தினை திணிப்பதற்காக விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி திருகோணமலையில் பாடல்பெற்ற தலமான கோணேஸ்வரத்தையும் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முயற்சிப்பதுடன் கன்னியா வெந்நீரூற்றில் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் விகாரை கட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

லண்டனில் இருபதுக்கு மேற்பட்ட சைவ ஆலயங்களின் ஒன்றியத்தின் தலைவராக இங்குவந்துள்ள இலண்டன் வோள்தஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தலைவர் மு.கோபாலகிருஸ்ணன் அவர்கள் இருந்துகொண்டு அனைத்து சைவ ஆலயங்களையும் ஒருங்கிணைத்து பௌத்த மயமாக்கலுக்கு எதிராக கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தினை முன்னேற்றவேண்டுமாகயிருந்தால், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவிசெய்யவேண்டுமானால் தொல்பொருள் திணைக்களம் ஊடாக சைவ ஆலயங்களை அழித்து பௌத்த ஆலயங்கள் அமைக்கும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என்று குரல் கொடுத்ததுமட்டுமன்றி எமது உரிமைகளுக்காக நாங்கள் நடாத்தும்போராட்டங்களுக்கு அவரது தலைமையில் கைகொடுத்துக்கொண்டிருக்கின்றார்.

கிழக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# வடக்கு ஆளுநராக ஜோன் அமரதுங்க...!




வடக்கு மாகாண ஆளுநராக ஜோன் அமரதுங்க மே7ல் நியமிக்கப்படுவார் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் இடத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான ஜோன் அமரதுங்க நியமிக்கப்படவுள்ளார்.

ஜனதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆளுநர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தற்போதைய ஆளுநர்கள் அனைவரும் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்துபோது நியமனம் பெற்றவர்கள். எனினும், பதவியேற்ற கையோடு ரணில் ஆளுநர் மாற்றங்களைச் செய்யவில்லை.

இந்நிலையில் அடுத்தடுத்த ஆண்டுகளில் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் தற்போது ஆளுநர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

அதனடிப்படையில் கிழக்கு மாகாணத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான செந்தில் தொண்டமானை நியமிக்க நகர்வுகள் இடம்பெற்று வரும் நிலையில், வடக்கிலும் ஆளுநரை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பதவியைப் பெறப் பலரும் முயற்சித்து வந்த நிலையில் நன்கு தமிழ் தெரிந்த சிங்கள இனத்தவரான ஜோன் அமரதுங்க நியமிக்கப்படவுள்ளார் என்று அறியமுடிந்தது.

இன்று இலண்டன் புறப்பட்டுச் செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெசாக் தினத்துக்கு முதல் நாள் நாடு திரும்பியதும் ஆளுநர் நியமனப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழில் விபத்தில் சிக்கிப் பெண் உயிரிழப்பு!

## காயமடைந்து கிடக்கும் போது நகைகள் கொள்ளை!





யாழ். ஊரெழு பர்வதவர்த்தனி மனோன் மணி அம்மன் ஆலயத்திற்கு அருகில் பலாலி வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 05.15 மணியளவில் நடைபெற்ற விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஊரெழுவில் அமைந்துள்ள இரு ஆலயங்களுக்குச் சென்று விட்டு உரும்பிராயில் அமைந்துள்ள வீட்டிற்குக் குறித்த வயோதிபப் பெண்மணி துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த போது ஊரெழு பர்வதவர்த்தனி மனோன்மணி அம்மன் ஆலயத்திற்கு அருகில் பலாலி வீதியில் மஞ்சள் கடவையின் எல்லையில் பின்னால் வேகமாக வந்த பட்டா ரக வாகனம் வயோதிபப் பெண்ணைச் சடுதியாக மோதித் தள்ளியது.

சம்பவத்தில் வயோதிபப் பெண் தூக்கி வீசப்பட்டுத் தலையில் படுகாயமடைந்தார்.

சம்பவம் இடம்பெற்றவுடன் அப் பகுதியில் மக்கள் அதிகளவில் சூழ்ந்தமையால் அச்சமுற்ற பட்டா ரக வாகனத்தில் வந்தவர்களே குறித்த வயோதிபப் பெண்ணைத் தமது வாகனத்தில் கொண்டு சென்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைத்து விட்டு அங்கிருந்து நழுவியுள்ளனர்.

இந்நிலையில் சுயநினைவற்று ஆபத்தான நிலையிலிருந்த குறித்த வயோதிபப் பெண்மணிக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று நள்ளிரவு 12 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் வடக்கு கற்பக விநாயகர் கோவில் கிளை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட உமாதேவி கனகநாயகம் (வயது-73) என்ற வயோதிபப் பெண்மணியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

விசாரணைகளைத் தொடர்ந்து உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பட்டா ரக வாகனத்தைச் செலுத்தி வந்தவர் உட்பட வாகனத்தில் இருந்தவர்கள் அனைவரும் மதுபோதையில் இருந்துள்ளதுடன் வேகமாக வாகனத்தைச் செலுத்தியே மோதியதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் நடைபெற்றுச் சில நிமிடங்களில் அப் பகுதியில் நின்றவர்களால் பொலிஸாரின் அவசரத் தொலைபேசி இலக்கத்திற்குத் தகவல் வழங்கப்பட்ட போதிலும் இரவு-07.45 மணியளவிலேயே கோப்பாய்ப் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகள் மேற்கொண்டனர்.

இந்நிலையில் விபத்துக்குக் காரணமான பட்டாரக வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட்ட நிலையில் விபத்திற்கு காரணமானவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதேவேளை, விபத்து ஏற்படும் போது தனது மனைவி அணிந்திருந்த தங்கச் சங்கிலி, மோதிரம், காப்பு உள்ளிட்ட ஆறு பவுண் தங்க நகைகள் மருத்துவமனையில் ஒப்படைக்கப்படுவதற்கு முன்பாக அபகரிக்கப்பட்டுள்ளதாக உயிரிழந்த மூதாட்டியின் கணவரான ஓய்வுநிலைக் கிராமசேவகர் கனகநாயகம் தெரிவித்தார்.

தனது மனைவியின் உயிரிழப்புக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# தாயகம் விடியும் வரை தமிழினம் ஓயாது!

## மே நாள் நிகழ்விற்கு சிறீதரன் அழைப்பு






தமிழ்த்தேசிய மே நாள் நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் அரசுக்கட்சியின் ஏற்பாட்டில், மே முதலாம் நாள், கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

சமகாலத்தில், தமிழ்த்தேசிய இனம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் எதிர்த்தும், தாயகம் விடியும் வரை தமிழினம் ஓயாது எனும் அடிப்படையில் குரல்கொடுக்கும் இளைஞர் மற்றும் யுவதிகளின் பெருந்திரட்சியின் ஊடாக, பன்னாட்டு சமூகத்துக்கும், அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் ■ கிளிநொச்சி

# பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்ல வேண்டும்

# நீதிமன்ற கட்டளை அதுவே - சுமந்திரன்!



நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் வெடுக்கு நாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்ல வேண்டும் அதனை மதித்து அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் என நாடாமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி மலைக்கு இன்றைய தினம் (சனிக்கிழமை) விஜயம் செய்த அவர் ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தினை பார்வையிட்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், “வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட பின்னர். கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த ஆலயம் தொடர்பாக நீதிமன்றில் இரு கட்டளைகள் வழங்கப்பட்டதற்கினங்க அந்த விக்கிரகங்கள் மீளவும் பிரதிஸ்டை செய்யும் செயற்பாடு இடம்பெற்றிருக்கின்றது.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 17ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

எனவே நீதிமன்றில் தவறான கருத்துக்கள் எதும் சொல்லப்பட்டால் அதற்கு பதில் அளிக்கும் விதமாக இன்றைய தினம் நேரிலே ஆலயத்திற்கு சென்று விடயங்களை அவதானித்துள்ளோம். இது ஒரு மகிழ்ச்சியான விடயம்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்திற்கு வருகைதந்த பக்தர்களின் அடையாள அட்டைகள் பதிவுசெய்யப்பட்டமை தேவையற்ற ஒரு விடயம்.

இன்றையதினம் அவ்வாறான நடவடிக்கை இடம்பெறவில்லை. பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்வதற்கு இடமளிக்க வேண்டும் என்பதே நீதிமன்றின் கட்டளையாக இருக்கின்றது.

அதனை மதித்து அனைத்து அரச உத்தியோகதர்களும் செயற்படவேண்டும். செயற்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.“ எனத் தெரிவித்துள்ளார்.







வடக்கு செய்திகள் ■ வவுனியா

# உழைக்கும் தமிழ் மக்களின் விடுதலையே தமிழ் தேசியம்:

## தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை!



1860 ஆம் ஆண்டுகளின் இறுதியில் ஸ்காட்லாந்து நீதிமன்றத்திற்கு வந்த ஒரு வழக்கில் 3 தொழிலாளர்கள் ‘ஒரு ரயில் விபத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்ததற்கு குற்றவாளிகள் இவர்கள்தான்’ என குற்றம் சாட்டப்பட்டு இருந்தனர். ஒருவர் அந்த ரயில் பெட்டி இயக்கியவர், ஒருவர் அந்த சமிக்கைகளை தர வேண் டியவர், மற் றொருவர் அந்த ரயில் பெட்டிக்கு பாதுகாப்பாக வரவேண்டிய காவலாளி. அந்த வழக்கில் அந்த மூன்று பேரும் வைத்த வாதம் ஒன்றே ஒன்று தான். ஒருநாளைக்கு 14 மணி நேரத்திலிருந்து 20 மணி நேரம் வரை வேலை செய்து வந்த மூவரும், சில நேரங்களில் 40 முதல் 50 மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அதன் காரணமாக அவர்கள் மயக்கமடைந்து இந்த விபத்து நேர்ந்தது என்று நீதி மன்றத்தில் தெரிவித்தனர்.

ஆம், உலகிலேயே நாங்கள் தான் நாகரீகம் அடைந்தவர்கள் என்று பெருமை பேசிய அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சிக்குப் பிறகு, தொழிலாளர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளில் ஒன்று தான் மேலே கூறிய வழக்கு. இது போன்ற நூற்றுக்கணக்கான நிகழ்வுகளை வரலாறு தனக்குள்ளே ஒளித்து வைத்திருக்கிறது.

உழைக்கும் வர்க்கத்தின் உழைப்பு என்ற உட்பொருள் இல்லாமல் இங்கு எந்த ஒரு உற்பத்தியும் நடப்பதில்லை என்கின்ற அடிப்படை பொருளியல் கோட்பாட்டை மறுத்து வந்த முதலாளித்துவத்தின் கோரப்பிடியில் உல களாவிய தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும் வேலை செய்துவந்த உழைப்பாளர்கள் தங்கள் உழைப்புக்கான நேரக் கணக்கென்று ஒன்று இல்லாமலும், உழைத்த நேரத்திற்கு கூலியென்று ஒன்று கிடைக்காமலும் இருந்து வந்த காலம் அது.

புரட்சியாளர் மார்க்ஸ், புரட்சியாளர் எங்கல்ஸ் போன்ற மாபெரும் தலைமைகளின் கீழ் புத்துணர்ச்சி பெற்ற தொழிலாளர் வர்க்கம் தங்களுக்கான வேலை நேரத்தை ஒரு நாளைக்கு 8 மணி நேரம் என வகுத்து தருமாறு அரசிடமும், முதலாளிய வர்க்கத்தினிடமும் கோரிக்கை வைத்திருந்தனர். அக்கோரிக்கையின் ஒரு பகுதியாக அமெரிக்காவின் சிக்காகோ பகுதியில் உள்ள ‘ஹே சந்தை ( ர்யல ஆயசமநவ)’ என்னும் பகுதியில் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டத்தில் நடந்த காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் 4 தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன், தொழிலாளர்களின் தலைவர்களை பொய் குற்றம் சாட்டி தூக்கில் ஏற்றி முதலாளிய வகுப்பு தனது வெறியை தீர்த்துக் கொண்டது. இந்த மாபெரும் ஈக நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது தான் இன்று உலகம் முழுவதும் உழைக்கும் மக்கள் தங்கள் உரிமையை நாளாக கொண்டாடுகின்ற ‘மே தினம்’ என்று அழைக்கப்படும் ‘உலக உழைப்பாளர் தினம்’ ஆகும்.

வருடம் முழுவதும் நினைத்துப் பாராட்டப்பட வேண்டிய உழைக்கும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அடி மைப்படுத்தப்பட்ட உழைக்கும் வர்க்கம் தங்களின் உரிமைக்காகவும், நலனிற்காகவும் பல நூற்றாண்டுகளாகப் போராடி அடிமை விலங்கினை உடைத்தெறிந்து தமிழ்த்தேசிய உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும்.

உழைக்கும் தமிழ் மக்கள் சிங்கள அரசிடம் போராடி எமக்கான உரிமைகளை பெற்று என்று விடுதலை பெறுகிறார்களோ அன்று தமிழ் தேசியம் நிலைபெறும் என தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை தனது தொழிலாளர் தின செய்தியில் தெரிவித்துள்ளது.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# போதை பாவிக்காத தமிழ் அரசியல்வாதிகள் யார்? தவிசாளர் சுகிதரனின் வீட்டிற்கு முன்னால் நடந்ததை

# ஊடகம் மூடி மறைத்தது ஏன்?



யாழில் பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரின் வீட்டின் முன்னால் ஒரு பெண் தீவைத்து உயிரை மாய்த்திருந்த நிலையில் அனைத்து ஊடகங்களும் இதன் பின்னணியை மூடி மறைத்துள்ளதாக தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

“பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம்“ என்ற தொனிப்பொளில் யாழ். நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த தவிசாளர் பிரபல கட்சி ஒன்றின் பிரமுகர் என்றும் இதன் காரணமாகவே அனைத்து ஊடகங்களும் இதன் பின்னணியை மூடி மறைத்துள்ளதாகவும் இதே சாதாரண நபர் ஒருவரின் வீட்டின் முன்பு இவ்வாறு நடைபெற்றிருந்தால் அனைத்து ஊடகங்களும் முண்டியடித்து பின்னணியை துலக்கியிருப்பார்கள் என்றும் ஐங்கரநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்று அந்த சம்பவம் காற்றோடு காற்றாக போய் விட்டதாகவும் ஊடகங்களும் அதனை அடக்கிவாசித்துள்ளதாகவும் ஐங்கரநேசன் குறிப்பிட்டள்ளார்.

தமிழ் அரசியல் வாதிகள் இதயசுத்தியானவர்களாக இருந்திருந்தால் குறித்த உறுப்பினரை விசாரணை முடியும் வரை கட்சியில் இருந்து இடைநிறுத்துவதாக அறிவித்திருக்க வேண்டும் என்றும் ஐங்கரநேசன் குறிப்பிட்டுள்ளார்.

இன்று பிஞ்சு குழந்தைகளின் கைகளில் போதை பொருள் என்ற நஞ்சு திணிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஐங்கரநேசன் தமிழ் அரசியல் வாதிகளில் எந்த அரசியல்வாதி தான் போதை பாவிக்கவில்லை என்று துணிந்து செல்வார்களா என்றும் கேள்வி எழுப்பியிருந்தார்.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் சுயநலவாதிகள்..! அவர்களின்

# ஆட்டத்துக்கு ஆட முடியாது

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் கட்சியினர் நாட்டைப் பிளவுபடுத்துவதிலேயே குறியாகவுள்ளதாகவும் அவர்களின் ஆட்டத்துக்கு ஆட முடியாதென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை உசுப்பேத்தி விடுவதுதான் தமிழ்க் கட்சியினரின் அன்றாட தொழிலாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனூடாக அவர்கள் தங்கள் சுயலாப அரசியலை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் குற்றம் சாட்டினார்.

ஹர்த்தால் போராட்டங்கள் மூலம் எதையும் சாதிக்க முடியாது என்றும், தமிழ் மக்களை ஏமாற்றவே இப்படியான போராட்டங்களைத் தமிழ்க் கட்சியினர் நடத்துகின்றனர் என்றும் குறிப்பிட்டார். தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக வடக்கு - கிழக்கில் கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்க் கட்சிகளின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் ஹர்த்தால் தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தனவிடம் வினவிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேற்கு செய்திகள் ■ கொழும்பு



## யாழில் சொந்தமாக காணி...

சுன்னாகம் கந்தரோடை பகுதியில் தமிழ் - பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களும் ,அதன் எச்சங்களும் காணப்படுகின்றன.

அவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

தமிழ் - பௌத்த எச்சங்கள் காணப்படும் இடத்திற்கு அருகில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான சுமார் 06 பரப்பு காணியினை தென்னிலங்கையை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் பணம் கொடுத்து வாங்கியுள்ளார்.

இந்நிலையில் குறித்த காணிக்குள் புதிய விகாரை ஒன்றினை அமைக்கவுள்ளதாகவும் , விகாரை அமைக்கவுள்ள காணிக்கு அருகில் தொல்லியல் எச்சங்கள் காணப்படுவதனால், விகாரை அமைப்பதால் அதற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா ? அக்காணியில் விகாரை அமைக்கலாமா ? என தொல்லியல் திணைக்களத்திடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

தொல்லியல் திணைக்களம் விகாரை அமைக்க அனுமதி வழங்கியவுடன், ஏனைய அனுமதிகளை விரைந்து எடுத்து, விகாரை கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க பிக்கு தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சிறுபான்மையினர் மீதான...

அபிவிருத்திச் செயற்திட்டத்தின் விசேட பிரதிநிதி சனா ரஸ்ஸலா ஆகியோருக்கும் சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை (28.04.2023) யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கூறிய விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் காணி அபகரிப்பு, தொல்பொருள் வளச்சுரண்டல் என்பன தொடரும் பட்சத்தில் இந்நிலை ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இத்தகைய முறையற்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தும்படி ஐ.நா அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பறிபோகும் தமிழர் தாயக...

நிலப்பகுதி முழுவதிலும் சிங்களமயமாக்கல் வேலைத்திட்டத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாங்கள் இந்த விடயத்தினை ஐ.நா மட்டிலும் பதிவு செய்திருக்கிறோம். ஆகவே எங்களைப்பொறுத்தவரையில் மக்கள் மட்டத்தில் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இன்று இப்பபுதியிலுள்ள மக்களின் தொண்டைகளில் கைவைத்த நிலையில் தான் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான நிலைகள் மத்தியில் அவர்கள் எங்களை அழைத்து இந்த விகாரை சம்மந்தமாக பிரச்சனைகளை வெளிப்படுத்தி இருந்தார்கள். எங்களைப்பொறுத்த வரையில் இந்த மாதிரியான சட்டவிரோத இனவாத போக்கிற்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள்பறிபோய்க்கொண்டே இருக்கும்.

நாங்கள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கெதிராக எங்களுடைய முழு எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம். எங்களுடைய எதிர்ப்புக்களைத்தாண்டியே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற நிலையை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்

## விடுதலைப் புலிகளின் தலை...

நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் பிரபாகரன் இருந்திருந்தால் உடனடி தீர்வு கிடைத்திருக்கும். அப்படியான தவறுகளும் இனி வரும் காலங்களில் நடந்தும் இருக்காது.

அரசாங்கத்திற்கும் பிரபாகரனுக்கும் இடையில் தான் குழப்பம் ஏற்பட்டிருந்தது. எங்களுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் குழப்பம் ஏற்படவில்லை.

அவர் ஒரு நல்ல மனிதர் மாத்திரமன்றி நேர்மையானவரும் கூட. ஒரு தவறுக்கு உடனடியாக தண்டனை வழங்க கூடிய ஒருவர்.

ஆனால் எங்களுடைய அரசாங்கம் வழக்கு விசாரணைகளில் சம்பந்தப்பட்டவர்கள் இறக்கும் வரையும், இறந்த பின்னும் அந்த வழக்குகள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது" - என்றார்.

## கூச்சலிடுவதால் கோட்டை...

அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த செய்தியில், "உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்படுகின்ற தேச மக்களே ஒன்றுபடுங்கள்" என்ற மேதின அறைகூவலை ஏற்று, நாமும் அன்று எமது தேச விடுதலை போராட்டத்தின் வழி நின்று உழைக்கும் மக்களின் உரிமைக்காகவும் எழுச்சி கொண்டவர்கள் எவரும் எவரையும் அடிமை என்று கொள்ளாத சமத்துவ தேசத்தை வென்றிட புரட்சிகர இலட்சியக் கனவோடு நாம் நீதியான போராட்டக்களத்தில் நின்றவர்கள்.

நீதியான எமது உரிமைப்போராட்டம் சகோதர இயக்கங்கள் மீதான மேலாதிக்க வன்முறைகளாலும், நாம் வெறுக்கும் உள்ளியக்க படுகொலைகளாலும், அநீதியான அழிவு யுத்தமாக மாறிய போது, தீர்க்கதரிசனமாக எமது இலட்சிய பாதையை நாம் மாற்றியவர்கள்.

ஆனாலும் பயணத்தை நிறுத்தவில்லை. எந்த இலட்சிய கனவுகளுக்காக நாம் அன்று போராட எழுந்தோமா அதே இலட்சிய கனவுகளுடனே நாம் வகுத்த தேசிய நல்லிணக்க பாதையிலும் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம். எமக்கு கிடைத்த அரசியல் பலத்திற்கு ஏற்ற வகையில் முடிந்தளவு எமது மக்களுக்கான வெற்றிகளையும் அடைந்து வருகின்றோம்,.

அரசியலில் சுதந்திரம், பொருளாதாரத்தில் சமத்துவம், சமூகத்தில் சகோதரத்துவம்,. இத்தகைய நாகரீக தேசத்தை உருவாக்கவே நாம் நடைமுறையில் உழைத்து வருகின்றோம்.

உழைக்கும் மக்களின் பெயராலும், தமிழ் தேசிய இனத்தின் பெயராலும் வெறுமனே கூச்சலிடுவதால் எந்த கோட்டையின் கதவுகளும் திறக்காது, இன மத சமூக முரண்பாடுகளை வெறுமனே அறிக்கையிட்டு அதில் குளிர்காய்ந்து

அர்த்தமற்ற அரசியல் நடத்துவதால், இருப்பதை விடவும் எல்லா பிரச்சினைகளும் கொழுத்து கூர்மையடையுமே தவிர நீதி ஒரு போதும் கிடைக்காது.

அதற்காக எவரும் எவரிடமும் சரணாகதி அடைவதென்றோ, சமத்துவ உரிமையற்ற சமரசங்களுக்கு செல்வதென்றோ அர்த்தமல்ல. கால மாற்றமும், சூழல் மாற்றமும் எமக்கு புதிய அனுபவங்களை கற்றுத்தந்திருக்கிறது.

அரசியல் அதிகாரங்களை வென்றெடுப்பதன் ஊடாக உழைக்கும் மக்களோ, அன்றி எமது இன மத சமூக மக்களோ எவரிடமும் கையேந்தி வாழாத

காலச்சூழலை நாம் படிப்படியாக உருவாக்கவே உழைத்து வருகின்றோம்.அரசியல் பலம் போதிய அளவு எமக்கு கிடைதிருந்தால் எமது மண்ணில் இன்னமும் அதிக மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். நீரில் வாழும் மீன்களைப்போல் நாமே என்றும் மக்கள் மத்தியில் நீங்காதிருப்பவர்கள்.

மக்களின் பிரச்சினைகள் சகலதையும் ஆழ் மன உணர்வுகளில் நாமே ஏந்தியிருப்பவர்கள். உழைப்பவர் இடர் தீர, வறியோர் வாழ்வுயர, நிலமற்றோர், வீடற்றோர் நிலை மாற, சமூக சமத்துவ நீதி நிலவ, பெண்களின் சமவுரிமை வெல்ல, வேலையற்ற இளைஞர் யுவதிகளின் தேவைகள் நிறைவேற, எல்லோரும் எல்லாமும் பெற்று

சரிநிகர் சமனென்ற நிமிர் வாழ்வு மலர, தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம். அன்றாட தேவைகளின் தீர்விற்கும்,. அபிவிருத்தியில் தமிழ் தேசத்தின் மலர்ச்சிக்கும், அரசியலுரிமையில் எம் மக்களின் நிரந்தர மகிழ்ச்சிக்கும், தேசிய நல்லிணக்க வழி நின்று தொடர்ந்தும் செல்வோம் நாம் செல்லும் பயணம் வெல்லும்!

தமிழ், முஸ்லிம், சிங்கள உழைப்பவர் ஒற்றுமை ஓங்கட்டும் உழைக்கும் மக்களின் உரிமைகள் வெல்லட்டும்!

தமிழ் பேசுவோர் தேசம் தலை நிமிரட்டும்!!

இன மத சமூக சமத்துவ நீதி நிலவட்டும்!!!"

இவ்வாறு அந்த வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

## தமிழ், முஸ்லிம் எம்.பிகளின்...

நலன்களை புறக்கணித்து , ஓர் சுரண்டல் பொருளாதார அமைப்பினை தொடர்ந்து பேணிவரும் ஒன்றாகவே நிலைபெற்று நிற்கின்றது.

இந்த அரசியல் பொருளாதாரச் சூழலில் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழ்த் தொழிலாளர்களே! அதுவும் குறிப்பாக, கடந்த 200 ஆண்டுகளாக இலங்கைத் தீவின் பொருளாதாரத்திற்கு உந்து சக்தியாக விளங்கிவரும் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள், தமது அடிப்படை உரிமைகளான- உழைப்புக்கு ஏற்ற ஊதியம், சுகாதாரத்தோடு கூடிய குடியிருப்புக்கள் மற்றும் கல்விக்கான சமவாய்ப்புக்கள் என்பன தொடர்ந்து மறுக்கப்படும் நிலையிலேயே துன்பத்தில் வாழ்கின்றனர். இதற்கான முழுமுதற் காரணம் 1948ல் இலங்கைத் தீவில் இருந்து ஆங்கில ஏகாதிபத்திகள் வெளியேறிய ஒருசில மாதங்களுக்குள்ளேயே, புதிய சிங்கள ஆட்சியாளர்களால் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை மற்றும் வாக்குரிமை என்பன அன்றைய பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்த சில வடகிழக்கு தமிழ் முஸ்லிம் எம்.பிக்களின் ஒத்துழைப்போடு, பறித்தெடுக்கப்பட்ட இனவெறி நடவடிக்கையாகும்.

இதற்கு பிறகு, சுமார் 16 ஆண்டுகள் கழித்து, 1964ல் இந்த மக்களில் சுமார் அறுபது வீதமானவர்களை இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் வழிவகுத்தது.

இந்த இலங்கை இந்திய ஒப்பந்தம், அன்றிருந்த இரு நாட்டு அரசாங்கங்களும் எமது மக்களுக்கு கூட்டாக இழைத்த பாரிய கொடுமையாகும். இருந்தும், இந்த நாட்டில் எஞ்சி இருக்கும் மலையக தமிழ் மக்கள் இப்பொழுது எழுச்சி பெற தொடங்கியுள்ளனர்.

கால் நூற்றாண்டு கால யுத்தத்தினால் பேரழிவைச் சந்தித்த வடகிழக்கு மாநிலத்தின் தமிழ் பேசும் விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்களும் இந்த மே தினத்தில் நல்லதோர் எதிர்காலம் பற்றிய கனவுகளை தாங்கிய வண்ணம் வாழ்க்கைப் போராட்டத்தில் துணிந்து நிற்கின்றனர்.

இலங்கை தீவில் மே தினம் தொடர்பில் முதலுரிமை கொண்ட தொழிலாளர் கூட்டமாக இந்த மக்களே உள்ளனர். இவர்களை போன்றே, தென்னிலங்கையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் சிங்கள தொழிலாளர்களுக்கும் இந்த மே தினம் உரியதாகும். அனைவருக்கும் எமது மே தின வாழ்த்துக்களை நாம் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழின விடுதலையே...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

சிங்கள ஆட்சியாளர்களின் நிலையற்ற பொருளாதார கொள்கையினால் தொழிலாளர்களின் உரிமைகள் பெயரளவில் வரையறை செய்யப்பட்டாலும் பாதிக்கப்படும் போது தொழிலாளர்களுக்கான நியாயங்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுவதுடன் அரசின் அதிகாரவர்க்கம் மேற் கொள்ளும் சுரண்டல்களும் ஊழல்களும் தொழிலாளர் வர்க்கத்தை மீண்டெழ விடாது தொடர்ந்து ஒடுக்குமுறையில் வைத்துள்ளது.

தமிழர்களின் மறுக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைக்கான விடுதலை கிடைக்கும் வரை தமிழர் தேசத்தின் தொழிலாளர்கள் சிங்கள ஆட்சியாளர்களால் ஒடுக்கப்படுவார்கள். எனவே தமிழின விடுதலையே தொழிலாளர்களின் விடுதலை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2023 மேதினத்திலாவது வடக்கு கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்:

## அன்னராசா கோரிக்கை!



2023 மே தினத்திலாவது வடக்கு கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அண்ணலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று (30) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

வடக்கு கடற்பரப்பில், நீண்ட காலமாக சட்ட விரோதமான கடற்றொழில் முறைகள் மற்றும் கடலட்டை பண்ணை என்பவற்றால் அதிகளவில் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, இந்த தொழிலாளர் தினத்திலாவது கடற்றொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என அன்னராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடல் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து கடற்றொழிலாளரின் பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக் கொள்வது தொடர்பாக கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை ஜனாதிபதியை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்